வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017
## Term Examination, November- 2017

| தரம் :- 12 (2019) | கணக்கீடு | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

❖ *1 தொடக்கம் 25 வரையுள்ள எல்லா வினாக்களிற்கும் விடை அளிக்க.*

01. பின்வருவனவற்றுள் எக்கூற்று கணக்கீட்டின் பிரதான நோக்கத்தைக் குறிக்கின்றது?
    1) நிறுவனம் ஒன்றின் ஒரு நிதி ஆண்டிற்கான செயற்பாட்டுப் பெறுபேற்றை அறிந்து கொள்ளல்.
    2) கணக்கீட்டு அலகுகள் தொடர்பில் அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தேவையான பொருளாதாரத் தகவல்களை தொடர்பாடல் செய்வது.
    3) நிறுவனம் ஒன்றின் சொத்துக்கள் பொறுப்புக்களை அறிக்கைப்படுத்தல்
    4) நிறுவனம் ஒன்றின் ஒரு நிதி ஆண்டிற்கான காசுப்பாய்ச்சலை அறிக்கைப்படுத்தல்
    5) நிறுவனத்தின் மனித பௌதிக வளக்கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல்

02. பின்வருவனவற்றுள் எது முகாமையாளர் ஒருவருக்கு தேவையான தகவலாகக் கருதப்படும்
    1) சம்பளத்தை அதிகரிக்கக்கூடிய இயலுமை நிறுவனத்திற்கு காணப்படுகின்றதா?
    2) பொறுப்பு உத்தரவாதத்தை நிறைவேற்றுவதற்கான சிறந்த நிலைப்பாடு வணிகத்திற்குள்ளதா?
    3) முதலீட்டிற்கு ஏற்ற திருப்திகரமான அனுகூலம் கிடைக்கப்பெறுகின்றது?
    4) எதிர்கால அபிவிருத்திக்கு எடுக்கவேண்டிய தீர்மானங்கள் திட்டங்கள் எவை?
    5) தேவையான அறிக்கைகள் உரிய நிறுவனங்களிற்கு வழங்கப்படுகின்றனவா?

03. பின்வருவனவற்றுள் நிதிக் கணக்கீட்டின் செயன்முறையாகக் கருதப்படும்
    1) இனம் காணலும் அளவிடலும் 2) திட்டமிடல் 3) வரவுசெலவுத்திட்டம் தயாரித்தல்
    4) கட்டுப்படுத்தல் 5) கிரயக்கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல்

04. பின்வருவனவற்றுள் எது பொருளாதார அரசியல் காரணியாகும்
    1) உள்நாட்டு இறைவரிச்சட்டம்
    2) வரிக்கொள்கை
    3) கணக்கீட்டுடன் தொடர்புடைய வழக்கின் தீர்ப்பு
    4) கணக்கீட்டு கணக்காய்வு நியமச்சட்டம்
    5) கம்பனிச்சட்டம்

05. பின்வருவனவற்றுள் எது கணக்கீட்டின் வெளியீடு ஒன்றாகக் கருதப்படும்?
    1) கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் 2) பரீட்சைமீதி
    3) கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் 4) மூல ஏடுகள் 5) பேரேடுகள்

06. பின்வருவனவற்றுள் எது நிதிசார் தகவலாகக் கருதப்படும்?

1) காணிகட்டிடத்தின் பெறுமதி 200000 ரூபா
2) நிறுவனத்தில் காணப்படும் ஊழியர் எண்ணிக்கை 50
3) நிறுவனத்தில் குறித்த நிதி ஆண்டில் 50000 அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டது.
4) குறித்த நிறுவனம் 10000 கொப்பிகளை பாடசாலை ஒன்றிற்கு அன்பளிப்பாக வழங்கியது.
5) நிதி ஆண்டில் 2000 அலகு பொருட்கள் தீயால் அழிந்தது.

07. பின்வரும் கொடுக்கல் வாங்கலில் வணிகத்தின் உரிமையாண்மையில் தாக்கத்தினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல் எது?

1) நிமலன் 300000 ரூபா மூலதனம் இட்டு வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார்
2) நிமலன் தாயாரிடம் இருந்து 50000 ரூபா பெற்று நிறுவனத்தில் ஈடுபடுத்தினார்
3) வியாபார நடவடிக்கைகளுக்காக 500000 ரூபாவிற்கு மோட்டார் வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது.
4) மீள்விற்பனைக்கான பொருட்கள் 50000 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டது.
5) கடன்கொடுத்தோருக்கு 50000 ரூபா காசு கொடுத்து தீர்க்கப்பட்டது.

08. சஞ்சீவ் என்பவரினால் 01.01.2016 இல் 400000 ரூபா மூலதனம் இட்டு வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார். குறித்த நிதி ஆண்டில் 50000 ரூபா பெறுமதியான தளபாடம் ஒன்றை நிறுவனத்திற்கு கொண்டு வந்தார்.

மகனின் கல்விச் செலவுக்காக மாதாந்தம் 2000 ரூபாவை நிறுவனத்தில் இருந்து எடுத்துள்ளார். 31.12.2016 இல் காணப்பட்ட தேறிய சொத்து 600000 ரூபாவாகும். 31.12.2016 இல் இலாபம் யாது?

1) 226000 ரூபா 2) 174000 3) 152000 4) 200000 5) 150000

09. கடன்பட்டோரிடம் இருந்து பெற்று வைப்புச் செய்யப்பட்ட 5000 ரூபா காசோலை மறுக்கப்பட்டது. இதனை பதிவு செய்வதற்குரிய முதல்பதிவேடு

1) காசுப்பெறுவனவு நாட்குறிப்பேடு
2) காசுக்கொடுப்பனவு நாட்குறிப்பேடு
3) பொதுநாட்குறிப்பேடு
4) காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு
5) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு

10. கரன் நிறுவனத்தில் 31.12.2017 முடிவுற்ற நிதி ஆண்டில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

1) 60000 ரூபாவிற்கு பொருட்கள் கடனிற்கு கொள்வனவு செய்யப்பட்டது.
2) வாடகை 5000 ரூபா செலுத்தப்பட்டது.
3) 40000 ரூபா கிரயமான பொருட்கள் 60000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது.
4) கடன்கொடுத்தோர் ஒருவருக்கு செலுத்த வேண்டிய 10000 ரூபாவிற்கு 9500 ரூபா கொடுத்து தீர்க்கப்பட்டது.

| இல | மொத்த வருமானம் | மொத்த செலவு |
|---|---|---|
| 1) | 205000 | 105000 |
| 2) | 60500 | 45000 |
| 3) | 60000 | 45000 |
| 4) | 60000 | 40000 |
| 5) | 60000 | 60000 |

11. இரட்டை விளைவு விதியைச் சரியாகக் காட்டாத கூற்றைத் தெரிவு செய்க.
   1) சொத்து, செலவு அதிகரிப்பு வரவு
   2) பொறுப்பு, வருமானம், உரிமை அதிகரிப்பு செலவு
   3) சொத்து செலவு குறைவு வரவு
   4) பொறுப்பு, உரிமை, வருமானம் குறைதல் வரவு
   5) சொத்து, செலவு குறைதல் செலவு

12. கொடுக்கல் வாங்கலிற்குரிய இரட்டைப் பதிவை சரியாகக் காட்டுவது
   1) நவீனிடம் கொள்வனவு :- கொள்வனவுக் கணக்கு வரவு நவீன கணக்கு செலவு
   2) கடன்பட்டோரிடம் இருந்து பெற்ற காசோலை :- காசுக் கட்டுப்பாட்டுக்கணக்கு வரவு கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு செலவு
   3) வாடகைக்குகொடுத்த காசோலை :- காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு வாடகைக் கணக்கு செலவு
   4) பெற்றகழிவு நிரலின் கூட்டுத்தொகை :- பெற்றகழிவுக் கணக்கு வரவு கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக்கணக்கு செலவு
   5) செல்வன் உட்திருப்பிய பொருட்கள் :- உட்திரும்பல் கணக்கு வரவு செல்வன் கணக்கு செலவு

13. பின்வரும் வழுக்களில் எது பரீட்சை மீதியில் தாக்கத்தை ஏற்படுத்தும்
   1) கொள்வனவு நாட்குறிப்பேட்டைக் கூட்டும் போது 3000 ரூபா அதிகமாகக் கூட்டப்பட்டது.
   2) சேதுவிற்கு விற்பனை 3000 ரூபா விற்பனை நாட்குறிப்பேட்டில் 300 ரூபா எனப்பதியப்பட்டது
   3) கடன்பட்டோர் கட்டுபாட்டுக் கணக்கை கூட்டும் போது 1000 ரூபாவால் அதிகமாகக் கூட்டப்பட்டது
   4) பெறுவன நாட்குறிப்பேட்டின் கழிவு நிரலினைக் கூட்டும் போது 200 ரூபா அதிகமாகக் கூட்டப்பட்டது.
   5) கொடுத்த வாடகை 4500 ரூபா கொடுப்பனவு நாட்குறிப்பேட்டில் 450 ரூபா எனப்பதியப்பட்டது.

14. சுஜி நிறுவனத்தின் 31.03.2017 முடிவுற்ற ஆண்டில் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு 95000 ரூபா வரவு மீதியைக் காட்டியது. ஆனால் வங்கிக்கூற்று மீதியானது வேறு ஒரு மீதியைக் காட்டியது. பின்வரும் காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டது.
   அ) வங்கி வசூலித்த பங்கிலாபம் 3000 ரூபா காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் இடம் பெறவில்லை.
   ஆ) வங்கியால் வசூலிக்கப்படாத காசோலை 6000 ரூபா
   இ) வங்கியில் சமர்ப்பிக்காத காசோலை 6000 ரூபா
   ஈ) வங்கி அறவிட்ட தரகு 2500 ரூபா

   நிதி நிலமைக்கூற்றில் வெளிப்படுத்த வேண்டிய வங்கிக் கணக்கின் மீதி
   1) 95500 ரூ 2) 99000 ரூ 3) 91000 ரூ 4) 99500 ரூ 5) 1500 ரூ

15. ராகவன் நிறுவன சுரேன் என்பவரிடம் இருந்து 70000 ரூபாவிற்கு மீள்விற்பனைப் பொருட்களைக் கொள்வனவு செய்தார். அவற்றில் 2000 பெறுமதியான பொருட்கள் ராகவனால் திருப்தி அனுப்பப்பட்டது. மிகுதிப் பொருட்கள் 95000 ரூபாவிற்கு காசிற்கு விற்பனை செய்யப்பட்டது இவற்றை ராகவனின் ஏட்டில் பதிவதற்குரிய மூலப்பதிவேடுகளின் வரிசை.

1) பொது நாட்குறிப்பேடு, விற்பனைத்திரும்பல் நாட்குறிப்பேடு, பெறுவனவு நாட்குறிப்பேடு.
2) கொள்வனவு நாட்குறிப்பேடு, வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு
3) கொள்வனவு நாட்குறிப்பேடு, வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு, பெறுவனவு நாட்குறிப்பேடு.
4) விற்பனை நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு, பெறுவனவு நாட்குறிப்பேடு.
5) கொடுப்பனவு நாட்குறிப்பேடு, வெளித்திரும்பல் நாட்குறிப்பேடு, பெறுவனவு நாட்குறிப்பேடு.

16. 2017 ஜனவரி மாதத்தில் பிரதம காசாளரினால் சில்லறைக்காசாளருக்கு 3000 ரூபா முற்பணமாக வழங்கப்பட்டது. ஜனவரி மாதத்தில் 2850 ரூபா சில்லறைக்காசாளரினால் செலவு செய்யப்பட்டது.

1) வசக்கட்டு தொகை யாது?

……………………………………………………………………………………………………..

2) ஜனவரி மாத்தில் மீள்நிரப்பப்படும் தொகை யாது?

……………………………………………………………………………………………………..

17. நேசன் வற் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஆகும். இவர் ரோசியிடம் இருந்து 66000 ரூபாவிற்கு (வற் உள்ளடங்கலாக) கொள்வனவு செய்திருந்தார். நேசன் இப் பொருட்களை 100000 ரூபாவிற்கு (வற் நீங்கலாக) விற்பனை செய்திருந்தார். வற் 10 வீதம் ஆகும்.

நேசன் புத்தகங்களில் இக் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்குரிய இரட்டைப் பதிவுகளை தருக.

……………………………………………………………………………………………………..
……………………………………………………………………………………………………..
……………………………………………………………………………………………………..
……………………………………………………………………………………………………..

18. பொதுப்பேரேட்டில் காணப்படும் பின்வரும் கணக்குகளிற்குரிய வகைகளைக் குறிப்பிடுக.

1) பற்றுக்கணக்கு ……………………………………………………………………..……….
2) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக்கணக்கு ……………………………………………………...
3) உட்திரும்பல் கணக்கு ……..…………………………………………………………………
4) வாடகைக்கணக்கு ……………………………………………………………………………...

19. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய மூலப்பதிவேடுகளைக் குறிப்பிடுக.

1) கடன்பட்டோரிடம் இருந்து பெற்ற காசோலை 30000 ரூபா ……………………………….………
2) நிலா கம்பனியிடம் கொள்வனவு செய்த தளபாடங்கள் 100000 ரூபா ………………………….
3) சம்பளத்திற்காக கொடுக்கப்பட்ட காசோலை 15000 ரூபா ……………………………………...
4) வைப்புச் செய்யப்பட்ட காசோலை 20000 ரூபா வங்கியால் மறுக்கப்பட்டது…………...………

20. பின்வரும் கொடுக்கல் வாங்கலிற்கு வரவு வைக்க வேண்டிய செலவு வைக்க வேண்டிய கணக்குகளைக் குறிப்பிடுக

| | வரவு | செலவு |
|---|---|---|
| 1) சந்திரனிடம் கொள்வனவு 25000 ரூ | | |
| 2) கடன்பட்டோரிடம் இருந்து பெற்ற காசோலை மறுக்கப்படல் 15000 | | |

21. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக.

1) பற்றுக்கள் காரணமாக வணிகத்தின் செலவு அதிகரிக்கின்றது ( )
2) குறிக்கப்பட்ட நிதி ஆண்டிற்கான செயற்பாட்டுப் பெறுபேற்றை அறிவதற்காக வருமானக் கூற்று தயாரிக்கப்படுகின்றது ( )
3) ஒரு நிறுவனத்தின் தேறிய சொத்து உரிமையாண்மைக்கு சமமானதாகும் ( )
4) பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ஒரு பொறுப்புக் கணக்காகும் ( )

22. செந்தூரன் நிறுவனத்தின் 2017 ஜனவரி மாத்தில் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கானது 49000 வரவு மீதியைக் காட்டியது. ஆனால் வங்கிக் கூற்றானது வேறு ஒரு மீதியினைக் காட்டியது. பின்வரும் காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

1) வங்கியால் வசூல் செய்யப்படாத காசோலை 7000 ரூபா
2) மாற்றப்படாத காசோலை 4000 ரூ
3) நேரடி வைப்பு 3000 ரூ
4) வங்கி அறவிட்ட தரகு 800 ரூபா

ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கூற்று மீதி யாது? …………………………………………………………..

23. தீபா நிறுவன 31.03.2017 இலான பரீட்சைமீதி சமப்படாமையினால் தொங்கல் கணக்கில் இடப்பட்டது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

1) கொள்வனவு நாளேடானது 3000 ரூபாவால் குறைவாகக் கூட்டப்பட்டது.
2) காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் வரவுப்பக்கம் 6000 ரூபா அதிகமாகக் கூட்டப்பட்டது.

திருத்த நாட்குறிப்பு பதிவுகளைத் தருக.

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

24. வங்கிக்கூற்று மீதியை விட காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி அதிகமாக இருக்கக்கூடிய 2 சந்தர்ப்பங்கள் யாவை?

1. ……………………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………………

25. பொது நாட்குறிப்பேட்டில் பதிவிடக்கூடிய நடவடிக்கைகள் நான்கு தருக.

1. ……………………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………………
3. ……………………………………………………………………………………………………
4. ……………………………………………………………………………………………………

## பகுதி II

❖ **முதலாம் வினாவிற்கும் ஏனைய இரு வினாக்களிற்கும் விடை அளிக்குக.**

01. கமல் நிறுவனத்தில் 01.01.2017 இல் பின்வரும் மீதிகள் காணப்பட்டன.

| | | |
|---|---|---|
| காணிகட்டிடம் | 400000 | ரூபா |
| இயந்திரம் | 300000 | ரூபா |
| வங்கி மீதி | 150000 | ரூபா |
| இருப்பு | 60000 | ரூபா |
| கடன்பட்டோர் | | |
| குமரன் | 70000 | ரூபா |
| சீலன் | 50000 | ரூபா |
| சுந்தர் | 40000 | ரூபா |
| கடன் கொடுத்தோர் | | |
| மகேஸ் | 30000 | ரூபா |
| கரன் | 50000 | ரூபா |
| கணேஸ் | 20000 | ரூபா |

ஜனவரி மாத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.

01.01.2017 விற்பனை மூலம் பெற்ற காசோலை 35000 ரூபா
04.01.2017 கொள்வனவு 60000 ரூபா
05.01.2017 குமரனிடம் இருந்து பெற்ற பணம் 48000 ரூபா கழிவு 2000 ரூபா
08.01.2017 தளபாடம் கொள்வனவு காசோலை மூலம் 20000 ரூபா
10.01.2017 மகேசிடம் கொள்வனவு பட்டியல் இல 90 60000 ரூபா வியாபாரக் கழிவு 5 வீதம்
14.01.2017 வாடகைக்கு கொடுத்த காசோலை 30000 ரூபா
16.01.2017 உரிமையாளர் சொந்த தேவைக்கு வங்கியில் இருந்து எடுத்த பணம் 10000 ரூபா
18.01.2017 கரனிற்கு கொடுக்க வேண்டிய தொகை 10 வீத கழிவு நீக்கி கொடுத்து தீர்க்கப்பட்டது
20.01.2017 வங்கியில் இருந்து எடுத்த கடன் 75000 ரூபா
21.01.2017 உடன் காசுக்கொள்வனவு 15000 ரூபா
22.01.2017 சம்பளம் கொடுத்தது காசோலை மூலம் 20000 ரூபா
23.01.2017 பெற்ற தரகுப்பணம் 10000 ரூபா
24.01.2017 கரனிடம் கொள்வனவு 15000 ரூபா
கணேசிடம் கொள்வனவு 9000 ரூபா
25.01.2017 கரனிற்கு திருப்பியது 1200 ரூபா
கணேசிற்கு திருப்பியது 700 ரூபா
27.01.2017 சீலனிற்கு விற்பனை 20000 ரூபா வியாபாரக்கழிவு 5 வீதம்
சுந்தரிற்கு விற்பனை 30000 ரூபா வியாபாரக்கழிவு 10 வீதம்
29.01.2017 சீலனிடம் இருந்து வரவேண்டிய பணம் 10 வீத கழிவு நீக்கி பெற்றுக்கொள்ளப்பட்டது
30.01.2017 உடன் காசு விற்பனை 45000 ரூபா

1. முதற்பதிவேடுகள் 2. பொதுப்பேரேட்டுக்கணக்குகள் 3. பரீட்சை மீதி

02. டேவிட் வியாபார நிறுவனத்தின் 01.04.2017 இல் காணப்பட்ட மீதிகள் வருமாறு

| ஆதனம் பொறி | இருப்பு | வியாபார வருமதி | காசு | வங்கிக்கடன் | வியாபார | மூலதனம் |
|---|---|---|---|---|---|---|
| 500000 | 30000 | 20000 | 80000 | 50000 | 30000 | 550000 |

ஏப்ரல் மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.

1) 40000 ரூபாவிற்கு பொருட்கள் கடனிற்கு கொள்வனவு செய்யப்பட்டது
2) 20000 ரூபா கிரயமான பொருட்கள் 35000 ரூா காசிற்கு விற்பனை செய்யப்பட்டது.
3) வாடகை 7000 ரூபா செலுத்தப்பட்டது. இதில் 2000 ரூபா அடுத்த மாதத்திற்குரியதாகும்.
4) பொறி ஒன்று 60000 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டது. இது 5 வருட ஆயுட் காலத்தினைக் கொண்டதாகும்.
5) இம் மாதத்திற்கான மின்சாரப்பட்டியல் 4000 ரூபா பெற்றுக்கொள்ளப்பட்டது.
6) 10000 கிரயமான பொருட்கள் 15000 ரூபா கடனிற்கு விற்பனை செய்யப்பட்டது.
7) கடன்கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய பணம் 10 வீத கழிவு நீக்கி செலுத்தப்பட்டது.
8) பெற்ற தரகு வருமானம் 2000 ரூபா
9) உரிமையாளர் சொந்த உபயோகத்திற்காக 2000 ரூபா பணத்தினை வங்கியில் இருந்து எடுத்துள்ளர்.
10) கடன்பட்டோரிடம் இருந்து பெற்ற பணம் 500 ரூபா கழிவு 500 ரூபா

**தயாரிக்குக.**

1) மேற்தரப்பட்ட தகவல்களை மூலதனம் (வருமானம் - செலவு பொறுப்பு சொத்து எம் சமன்பாட்டின் கீழ்ப்பதிக.)
2) ஜனவரி மாதத்திற்கான வருமானக்கூற்று
3) 31.01.2017 இல் உரிமையாண்மை

The National e-learning Portal for The General Education

03. சரசவி பொது வரையறுத்த கம்பனியின் 31.03.2017 இற்கான பரீட்சைமீதி இணங்காததினால் தொங்கல் கணக்கில் இடப்பட்டது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

1) விற்பனை நாட்குறிப்பேடானது 5000 ரூபா மிகையாகக் கூட்டப்பட்டது.
2) நீலனிற்கு விற்பனை 2500 ரூபா விற்பனை நாட்குறிப்பேடடில் 2000 ரூபா எனப்பதிவு செய்யப்பட்டது.
3) தளபாடத்திருத்தம் 2000 ரூபா தளபாடக்கணக்கில் பதிவு செய்யப்பட்டது.
4) கடன்பட்டோரிடம் இருந்து பெற்ற பணம் 2500 ரூபா பெறுவனவு நாட்குறிப்பேட்டில் இருந்து கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றும் போது 2500 ரூபா எனப் பதியப்பட்டது.
5) குணா திருப்பிய பொருட்கள் 1000 ரூபா உட்திரும்பல் நாட்குறிப்பேட்டில் பதியாது தவறவிடப்பட்டிருந்தது.
6) பெறுவனவு நாட்குறிப்பேட்டின் கழிவு நிரலானது 1500 ரூபா பெற்ற கழிவாகக் கருதி ஏடுகளில் பதியப்பட்டது.
7) கொடுத்த வாடகை 7500 ரூ பொதுப் பேரேட்டுக் கணக்குகளில் சரியாகப்பதியப்பட்டிருந்த போதும் பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படவில்லை.
8) சம்பளம் கொடுத்தது 15000 ரூபா காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் தவறான பக்கத்தில் பதியப்பட்டது.

**தயாரிக்க வேண்டியது**

1) திருத்த நாட்குறிப்பு பதிவுகள் 2) தொங்கல் கணக்கு

04. றொசான் நிறுவனத்தின் 2017 மார்ச் மாதத்திற்கான காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கானது 70000 ரூபா வரவு மீதியைக் காட்டியது. ஆனால் வங்கிக் கூற்றானது வேறு ஒரு மீதியைக் காட்டியது. பின்வரும் காரணங்கள் கண்டு பிடிக்கப்பட்டது.

1) வங்கியில் வைப்புச் செய்வதற்கான அனுப்பப்பட்ட 7500 ரூபா காசோலை வங்கியால் வசூலிக்கப்படாது இருந்தது.
2) கடன்பட்டோரிடம் இருந்துபெற்ற பணம் பெறுவனவு நாட்குறிப்பேட்டில் 35000 ரூபாவாகக் காணப்பட்ட போதும் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு கொண்டு செல்லும் போது 53000 ரூபா எனக் கொண்டு செல்லப்பட்டது.
3) கடன்பட்டோர் ஒருவரினால் நேரடியாக வைப்புச்செய்யப்பட்ட பணம் 9000 ரூபா காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் இடம் பெறவில்லை.
4) வங்கி சேர்த்த பங்கிலாபம் 12000 ரூபா வங்கி அறவிட்ட தரகு 3000 ரூ காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படவில்லை.
5) காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவுப்பக்கம் 2000 ரூபா குறைவாகக் கூட்டப்பட்டது.
6) விநியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்ட காசோலை 6000 ரூபா கொடுப்பனவு நாட்குறிப்பேட்டில் 600 ரூபா எனப்பதியப்பட்டது.
7) விநியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்ட 20000 ரூபா காசோலை வங்கியில் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாது இருந்தது.
8) வாடகைக்காக வழங்கப்பட்ட காசோலை 6000 ரூபா பெறுவனவு நாட்குறிப்பேட்டில் பதியப்பட்டிருந்தது.

**தயாரிக்க வேண்டியது**

1) சீராக்கிய காசுக்கணக்கு
2) வங்கி இணக்கக்கூற்று

The National e-learning Portal for The General Education